சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 30.10.2021 supeedsam.com supeedsam@gmail.com







# பௌத்தர்கள் இல்லாத வடமுனை நெளுக்கல்மலையிலும் பௌத்தாலயமா?

## பல்வேறு பிரச்சினைகள் மத்தியிலும் கவனிப்பாரற்ற நிலையில் ஊத்துச்சேனை வடமுனை எல்லைக்கிராம மக்கள்

**ஜி. ஸ்ரீநேசன், முன்னாள் பா.உ , மட்டக்களப்பு.**

மட்டக்களப்பின் எல்லைக் கிராமங்களாகவும் பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லையிலும் வடமுனை,ஊத்துச்சேனைக் கிராமங்கள் உள்ளன. பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து பேரினவாத வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பல தமிழ் மக்கள் 1958,1983களில் இங்கு குடியேறியுள்ளனர். அதே மேளை வந்தாறுமூலை, மண்டூர், மலையக்கிராமங்கள் சார்ந்த மக்களும்

02 ஆம் பக்கத்தில்...

# வந்தாறுமுலையில் எல்லைக்கற்கல் நடும் தொல்பொருள் செயலணியின் முயற்சி முறியடிப்பு





(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேரத்தடி என்னும் தமிழர் பகுதிக்குள் தொல்பொருள் செயலணியினால் எல்லைக் கற்கல் நடுவதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தொல்பொருள் செயலணியினர் எல்லைக்கற்கள் நடுவதற்காக வந்துள்ள விடயத்தை அறிந்த வந்தாறுமூலை மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள்

02 ஆம் பக்கத்தில்...

# வவுனியாவில் சிங்கள குடியேற்றத்தினை கண்டித்து ஆர்ப்பாட்டம்



அனுராதபுர மாவட்டத்தின் வடக்கு பகுதியை சேர்ந்த சிங்கள மக்கள் வாழும் கிராமங்கள் சில வற்றை வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவுடன் எல்லை நிர்ணயத்தின் ஊடாக இணைக்க மேற்கொள்ளப்படும்

02 ஆம் பக்கத்தில்...

# பெரும்பாலான பௌத்த பிக்குகள் அதர்மத்தினையே போதித்து வருகின்றனர்

(துதிமோகன்)

பௌத்த தர்மம் என்பது மிகவும் உயர்ந்த தர்மம். நல்ல அறக்கருத்துகளை கொண்ட சமயம். ஆனால் இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான பௌத்த பிக்குகள் அதர்மத்தினையே போதித்து வருகின்றனர். அவர்கள் தர்மத்தினைப் போதிப்பவர்களாகயிருந்தால் அட்டூழியங்களை செய்ய வரமாட்டார்கள் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச

06 ஆம் பக்கத்தில்...



# சீனாவின் அதிரடி நடவடிக்கைக்கு மக்கள் வங்கி கொடுத்துள்ள பதிலடி

(காந்தன்)

நீதிமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் சீன நிறுவனத்தின் கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என இலங்கை மக்கள் வங்கி தெரிவித்துள்ளது.

சீனாவின் சேதனப்பசளைகள் நிறுவனத்தின் கடன் கடிதக் கொடுப்பனவுகள் மற்றும் ஒப்பந்தங்களை உரிய முறையில்

02 ஆம் பக்கத்தில்...

# நியூசிலாந்தில் சிறுபான்மையினருக்கான உரிமை சமமாக வழங்குவதை போன்று இங்கும் வழங்கப்பட வேண்டும்



(எருவில் துசி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும், இலங்கைக்கான நியுசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்லட்டனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு குறித்து இரா.சாணக்கியன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# புதிய அரசமைப்பு, மீனவர் பிரச்சினை: சம்பந்தனுடன் இந்தியத் தூதர் பேச்சு



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்று

02 ஆம் பக்கத்தில்...











# மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை நீக்க தீர்மானம்

## 31 ஆம் திகதி அதிகாலை 4.00 மணி நீங்குகிறது

நாடளாவிய ரீதியில் தற்போது நடைமுறையில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒக்டோபர் 31ஆம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை காலை காணொளி தொழில்நுட்பம் ஊடாக கொரோனா தடுப்புக் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...




## மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை நீக்க

இந்த நிலையில், மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டையைக் கட்டாயம் எடுத்துச்செல்வதற்கான இயலுமை தொடர்பாக உடன் கண்டறியவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க, கொரோனா சட்டதிட்டங்களில் வாய்ப்பளிக்கப்பட்டு உள்ளதென்று சுட்டிக்காட்டிய சுகாதார அதிகாரிகள், இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

சுகாதார நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைய சுற்றுலாத்துறையை மேம்படுத்த, அதிக அக்கறையுடன் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டுமென்று ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இலங்கையில் நடத்தப்படவுள்ள சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக, வெளிநாட்டு இரசிகர்கள் வருவதற்கான வாய்ப்பளித்தல் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மேலும் அவர்களை உயிர்க்குமிழிக்குள் வைத்திருந்து, தேவையான வசதிகளை வழங்க முடியுமென்றுசுகாதாரத் துறையினர் எடுத்துரைத்தனர்.

## புதிய அரசமைப்பு, மீனவர் பிரச்சினை: சம்பந்தனுடன் இந்தியத்

மாலை 4 மணியளவில் இருவரும் சந்தித்து உரையாடினர்.

இந்தச் சந்திப்பில் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திருமதி.பானு பிரகாஷ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சம்பந்தனுக்குத் தங்களுடைய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்த இந்தியத் தூதுவர், பல முக்கிய விடயங்கள் குறித்து சம்பந்தனுடன் உரையாடினார். இலங்கைக்கான புதிய அரசமைப்பு, இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை என்பவையும் இதில் அடங்கும். வடக்கு, கிழக்கில் இந்திய முதலீடுகள், உதவித் திட்டங்கள் பற்றியும் இதன்போது பேசப்பட்டன. மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவோடு இந்தியத் தூதுவர் சந்திப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

## பௌத்தர்கள் இல்லாத வடமுனை நெளுக்கல்மலையிலும்

விவசாயம், மீன்பிடி,கால்நடை வளர்ப்பு என்ற தொழில் அடிப்படையில் இங்கு குடியேறியுள்ளனர். இந்த மக்களின் குடியேற்ற விடயத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கவாசகம், பொறியியலாளர் மரியசிங்கம் போன்றவர்கள் பக்க துணையாக இருந்துள்ளார்கள். அதே வேளை அத்துமீறிய பெரும்பான்மைய இத்தவரின் குடியேற்றத்தை அகற்றுவதில் முன்னாள் அமைச்சர் தேவநாயகம் அவர்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இன்றைய நிலையில் வடமுனை, ஊத்துச்சேனை மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வடமுனையில் இருந்து 5 கி.மீ தொலைவிலுள்ள நெளுக்கல் மலையில் பௌத்தாலயம் ஒன்றை அமைப்பதற்குக் கிழக்குமாகாண ஆளுனர் நடவடிக்கை எடுத்துள்ளார். எத்தனையோ வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதிகள் உடைந்து சிதைந்து கிடக்க காட்டின் ஊடாக நெளு மலைக்காக புதிய 5 கி.மீ வீதியானது வீதி அபிவிருத்தித் திணைக்களம் மூலமாக அமைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அதாவது பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்தாலயம் அமைக்கப்படவுள்ளது. அப்படியென்றால் பெரும்பான்மையினக் குடியேற்றம் நடைபெற வாய்ப்புள்ளது. பொலன்னறுவை மாவட்ட சொறுவில், கறுப்பளை,முத்துக்கல், மன்னம்பிட்டி, வெலிக்கந்த போன்ற கிராமங்களில் இருந்து உயிர் இழப்புகள், சொத்திழப்புகள் மத்தியில் வடமுனை ஊத்துச்சேனையில் குடியேறிய மக்களை நோக்கி மேலுமொரு பெரும்பான்மையினக் குடியேற்றம் துரத்தி வருவதுபோல் தெரிகிறது. பிக்குகள், தொல்லியலாளர்கள், ஆளுனர் தரப்பினர், ஆர்.டி.டியினர் அங்கு அடிக்கடி பிரசன்னமாகி வருகின்றனர். மயிலத்தமடு, மாதவணை,காரமுனை, நெளுக்கல் மலை என்று மட்டக்களப்பு மண்ணை ஆக்கிமிப்பதற்கான திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்ந்தும் கதவுகளைத் தட்டிக்கொண்டே இருக்கின்றன. வியத்மக அமைப்பு சார்ந்தவர்கள் ஓரின சிங்கள மக்களை மாத்திரம் திருப்திப்படுத்தினால் அடுத்த தேர்தலிலிலும் பொதுஜனப்பெரமுனக் கட்சியை வெல்லச்செய்து விடலாம் என்ற மனப்பாங்குடன் செயற்படுகின்றனர். அதே வேளை அரணகம்விலயில் இருந்து 23 கி.மீ வீதி மயிலத்தமடு புலிபாஞ்சகல் நோக்கி வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் அமைக்கப்படுகிறது.எல்லாம் பெரும்பான்மை சமூகக் குடியேற்ற மையமானதாக உள்ளதாகவே அறியமுடிகிறது.

தொல்லியலாளர்களும், வியத்மக அமைப்பினரும் தமிழ் பேசும் மக்களைத் தொல்லைப்படுத்துவதென்றே சபதம் எடுத்துவிட்டார்கள் போல் தெரிகிறது. இப்படியான நிலையில் பொதுசனப் பெரமுனக் கட்சியிடம் உள்நாட்டுப் பிரச்சினைகளை அதிகரிப்பதற்கான பொறிமுறைகள் இருக்கின்றனவேயொழிய,உள்நாட்டுப் பிரிச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்தப் பொறிமுறையும் இல்லை. இவற்றைவிட வடமுனைக்குளம், மீராண்டவில், காடுகள் தோறும் மண்ணகழ்வுகள் பாரியளவில் நடைபெறுகின்றன.தடுக்க வேண்டிய ஆளுங்கட்சித் தமிழ் அரசியல்வாதிகளும் மண்ணகழ்வு வியாபாரத்தில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். இவர்கள் தமது ஆதரவாளர்கள், உறவினர்களுக்கு மண் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்து வருவாய்களில் பங்காளிகளாக உள்ளனர்.மண்ணகழர்களில் பொலன்னறுவை மாவட்டத்தவர்கள் %5%உம்,மட்டக்களப்பு மாவட்டத்தவர்கள் 25% அளவிலும் மண் வியாபாரம் செய்கின்றனர். மட்டக்களப்பு வளத்தை அழித்தாவது கோடீஸ்வரர்களாக மாற வேண்டும் என்ற இலக்குடன் அதிகார அரசியல் புள்ளியர்கள் செயற்படுகின்றனர். ஆனால் உள்ளூரில் உள்ளவர்கள் உழவியந்திரம் மூலமாகக்கூடத் தேவைகளுக்கு மண்ணைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றை விடவும் வடமுனை ஊத்துச்சேனை மக்களில் கணிசமானவர்கள் விவசாயிகளாவர்.அவர்களது விவசாய நிலங்கள் பல ஏக்கர்கள் வனவளவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் தமது பற்றைகள் மண்டியுள்ள விவசாய நிலங்களை அகற்றச் சென்றால் அங்கு வனவளஅதிகாரிகள் இடையூறுகள் விளைவிக்கிண்றனர்,கைது செய்கின்றனர். ஆனால் வசதி படைத்தவர்கள் கனரகவாகனங்களால் காடுகளைத் தள்ளுகின்றபோது கண்டுகொள்வதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.மேலும் இக்கிராம மக்களால் வழிபட்டு வந்த வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான வயல் காணி 21 ஏக்கர்கள் அடாத்தாக தனிப்பட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை, யானைகளின் தொல்லை, போக்குவரத்து வசதி இன்மை, பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, தரம்11 வரை கற்பதற்கான பாடசாலைகள் இல்லாமை, தினசரி இயங்கக்கூடிய வைத்தியசாலை இல்லாமை, விசஜந்துகளினால் உயிராபத்து போன்ற பல தொல்லைகளுடன் எல்லைப்புற மக்கள் போராடி வருகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்கள்,அமைச்சர்கள், அதிகாரிகள் இம்மக்கள் மீது அக்கறை காட்டுவது மிகக் குறைவு என்ற கருத்தினை அம்மக்கள் கொண்டுள்ளார்கள்.

அதே வேளை ஊற்றுச்சேனைக் கிராமத்தில் இருந்து சிறுவர்கள் சிறுமிகள் ஊழியமாக கிராமசேவை உத்தியோகத்தர் ஒருவர் மூலமாக கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு 90,93களில் அனுப்பப்பட்டுள்ளனர். அதில் சிறுவன் ஒருவன் 12 வயதில் 93 றாம் ஆண்டில் குறித்த கிராம் சேவை உத்தியோகத்தர் மூலமாக அனுப்பப்பட்டான்.அவன் இருபத்தெட்டு ஆண்டுகள் கடந்தும் இன்னும் பெற்றோரை வந்து சேரவில்லை என்கின்ற மனித உரிமை மீறலும் நடைபெற்றுள்ளது. பாமர மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் சில அரச உத்தியோகத்தர்களும் இருக்கத்தான் செய்கிறார்ர்கள். அதே வேளை அர்ப்பணிப்பான உத்தியோகத்தர்கள், அதிகாரிகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இப்படியான எல்லைப்புற கிராம மக்களின் பிரச்சினைகளை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று தீர்க்க வேண்டியது தார்மீகக் கடமையாகும்.அண்மையில் ஒரு அரசியல்வாதியும் பரிவாரங்களும் வடமுனை ஊத்துச்சேனை ஊடாக வந்துள்ளார். அவர் மக்களை விடுத்து மீராண்டகுளம் மண்ணைப் பார்த்துச் சென்றதாக மக்கள் கூறுகின்றனர்.இப்படித்தான் மட்டக்களப்பு மண்மீட்பர்கள் மண் வர்த்தகர்களாக மாறியுள்ளனர். இவ்வாறாக எல்லைக்கிராம மக்கள் பல தொல்லைகளைச் சுமந்து நெருக்கடிக்குள் வாழ்கிறார்கள்.ஆளுங்கட்சித் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆளுங்கட்சியின் பொம்மைகளாக இருந்து தலையாட்டிகளாகவும்,கைதூக்கிகளாகவும் இருந்து காலத்தைக் கடத்துகிறார்கள்.பதவிசுகம் பணசுகத்தில் மிதக்கவே விரும்புகிறார்கள்.




## நியூசிலாந்தில் சிறுபான்மையினருக்கான

நியூசிலாந்து நாடானது எமது நாட்டைப் போன்றே அங்கும் சிறுபான்மை மற்றும் ஆதி குடியிருப்புக்களை கொண்ட நாடாகும் ஆனால் அங்கு அவர்களுக்கு உரிய சம உரிமை அந்நாட்டு பிரதமரினால் வழங்கப்படுகின்றது. அந் நாட்டு பிரதமர் எம்மைப் போன்ற நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக திகழ்கின்றார்.

சந்திப்பின் போது எமது நாட்டில் அரசியல் நிலைமைகள் பற்றியும் சிறுபான்மை சமுகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றியும் கலந்துரையாடி இருந்தேன்.

மேற்கொண்டு மிக முக்கியமாக எமது நாட்டின் அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்லும் உல்லாசத்துறை, தொழில்நுட்பத்துறை போன்றவற்றின் எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்கள் பற்றியும் மற்றும் சூரிய ஒளி மூலமான சக்தியினை எதிர்காலத்தில் எவ்வாறு வினைத்திறனாக உபயோகிப்பது என்பது பற்றியும் கலந்துரையாடி இருந்தேன்.

அத்துடன் எமது பிரதேசங்களில் காணப்படும் காணி அபகரிப்பு மற்றும் வளச்சுரண்டல்கள் பற்றியும் அதிலும் குறிப்பாக சட்டவிரோத மண் அகழ்வு பற்றிய தொகுக்கப்பட்ட ஆவணம் ஒன்றையும் சமர்ப்பித்ததோடு அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய அழுத்தங்களை அரசுக்கு வழங்குமாறு கோரியிருந்தேன்.

மேலும், நியூசிலாந்து நாட்டிற்கான உயர்ஸ்தானிகர் எதிர்காலத்தில் மட்டக்களப்பிற்கு விஜயத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் எனது வேண்டுகோளை முன்வைத்து இருந்தேன். எனக் குறிப்பிட்டுள்ளார்.




## வவுனியாவில் சிங்கள குடியேற்றத்தினை

செயற்பாட்டை கண்டித்து நேற்று வவுனியா பழைய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பழைய பேரூந்து நிலையத்தினை சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் உட்பட குழுவினர் சிங்கள குடியேற்றங்கள் மற்றும் அதன் பாதிப்புக்களை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் அடங்க மறுப்பது எம் இனத்தின் குணம், எமது நிலத்தில் எம்மை நிம்மதியாக வாழ விடு, சீண்டாதே சீண்டாதே தமிழர்களை சீண்டாதே, இலங்கை அரசை குற்றவியல் நீதிமன்றத்தில் உடன் பாரப்படுத்து, மீண்டுமொரு இனவழிப்பு அரங்கேற்றமா, தமிழர் தாயகத்து நிலங்களை அபகரிப்பதை நிறுத்து போன்ற பதாதைகளை தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

## சீனாவின் அதிரடி நடவடிக்கைக்கு மக்கள்

செயற்படுத்தாமை காரணமாக இலங்கை மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலில் சேர்த்துள்ளதாக முன்னதாக சீன தூதரகம் அறிவித்திருந்தது.

இதனையடுத்தே மக்கள் வங்கியின் இந்த பதில் வெளியாகியுள்ளது.

கொடுப்பனவுகளை இடைநிறுத்துவது தொடர்பில் நீதிமன்றம் இடைக்கால தடையை விதித்தமை காரணமாகவே தாம் அதனை நிறுத்தியதாக மக்கள் வங்கி குறிப்பிட்டுள்ளது. இதேவேளை மக்கள் வங்கியின் இந்த செயற்பாடு காரணமாக சீனாவின் சேதனப் பசளை நிறுவனத்துக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், சீனத் தூதரகம் சுட்டிக்காட்டியிருந்தது.

அத்துடன் இலங்கையுடன் சர்வதேச வாத்தகத்தில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனங்கள், இலங்கை மக்கள் வங்கியால் வழங்கப்படும் கடன் கடிதங்களை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சீன தூதரகம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வந்தாறுமூலையில் எல்லைக்கற்கல் நடும்

முன்னணி ஆகிய கட்சியினர் அப்பகுதிக்கு சென்று தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்குசென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீனித்தம்பி யோகேஸ்வரன் மற்றும் சிறிநேசன் ,முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார்,ஏறாவூர்ப்பற்று பிரதேசசபை தவிசாளர் சர்வானந்தன் , தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி வடகிழக்கு தலைவர் கி.சேயோன்,ஏறாவூர்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் மக்களுடன் இணைந்து தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து அப்பகுதியில் தொல்பொருள் செயலணியின் எல்லைக்கற்களை நடும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டு அங்கிருந்து சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன்,

தமிழர்களின் பல இடங்கள் தொல்பொருள் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துவருகின்றது.கோத்தபாய ராஜபக்ஸ ஆட்சிக்குவந்ததும் நூறு வீதம் சிங்களவர்களைக்கொண்டதாகவும் இராணுவத்தினரையும் பௌத்த பிக்குகளையும் உள்ளடக்கியதாக ஒரு செயலணியை அமைத்து தொல்லியல் அடையாளங்களை கண்டுபிடித்து அதனை பௌத்த மக்களுக்கு உரியதென அடையாளப்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளார்.

அதன் பிரகாரம் தொல்லியல் துறையினர் வடகிழக்கில் தமிழர்கள் வாழும் பல இடங்களில் தங்களது பௌத்த இடங்களாக அடையாளப்படுத்திவருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலை,வேரம் என்னும் பகுதியில் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களுக்கு வந்து இது தங்களின் பகுதி இங்கு தொல்பொருள் அடையாளங்கள் இருக்கின்றது என காட்டுகின்றனர்.

பழங்கால செங்கல் இருந்த இடமெல்லாம் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறுகின்றார்கள்.இலங்கையில் பூர்வீகமாக தமிழர்கள் வாழ்ந்துவருகின்றார்கள்.இந்த நாடு பூர்வீக தமிழர்களின் வாழ்விடமாகும்.தமிழ் மக்கள் இந்த நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வாழ்ந்தார்கள்.பழங்காலத்தில் பௌத்தர்களுக்கு ஒருவிதமாகவும் தமிழர்களுக்கு ஒருவிதமாகவும் செங்கல் உற்பத்திசெய்யப்படவில்லை. அக்காலத்தில் அனைவருக்கும் பொதுவானதாகவே செங்கற்கல் இருந்தன.

ஆனால் தற்போது அந்த செங்கற்களை மையமாககொண்டு பௌத்தர்களின் வாழ்விடங்கள் என்று கூறுகின்றனர்.இலங்கையின் முதலாவது மன்னனும் தமிழன்தான்,இறுதி மன்னனும் தமிழனாகவே இருந்துள்ளான். தமிழர்கள் இந்த நாட்டினை ஆட்சிசெய்துள்ளார்கள்.அவ்வாறானவை தமிழர்களின் தொல்பொருள் இடங்களாக இருந்தால் அதனை தமிழர்களுடன் கலந்துரையாடி அவற்றினை பாதுப்பதில் எந்த தடையும் இல்லை.

ஆனால் எங்கு பழங்கால செங்கற்கள்,பழங்கால கல்தூண்கள் காணப்படுகின்றதோ அவற்றினையெல்லாம் பௌத்தர்களின்,சிங்களவர்களின் வாழ்விடங்கள் என்று குறிப்பிடுகின்றார்கள்.பொலநறுவையில் 18இந்து ஆலயங்கள் குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள் உள்ளன.அவ்வாறானால் ஏனைய பகுதிகளில் பெருமளவான சைவ ஆலயங்கள் இருந்திருக்கவேண்டும்.இன்றும் பல ஆலயங்கள் அழிவுகளுடன் அங்கு இருக்கின்றன.அவற்றினை வைத்துக்கொண்டு இன்று நாங்கள் பொலநறுவைக்கு சென்று தமிழர்கள் உரிமை கொண்டாடமுடியுமா?.

இன்று அநுராதபுரத்தில் உள்ள இசுறுமுனிய விகாரை அதுவொரு சைவசிவன் ஆலயம்.இன்று அவர்கள் அதனை விகாரையாக மாற்றியுள்ளனர்.இன்று தென்பகுதியில் உள்ள மிகவும் பழமையான பல சைவ ஆலயங்கள் பௌத்த விகாரைகளாக மாற்றப்பட்டுள்ளன.

தமிழர்கள் இவற்றினையெல்லாம் கேட்டுச்செல்வதுமில்லை,எங்களது இடமென்று சண்டைபிடிக்கவுமில்லை.எங்களது பகுதியென்று தொல்பொருள் பிரகடனப்படுத்துங்கள் என்று கூறவுமில்லை.இவ்வாறு இருக்கும்போது ஏன் வடகிழக்கு தமிழர் பூர்வீக பகுதியில் மட்டும் ஏன் அரசாங்கம் இவ்வாறான அட்டூழியங்களை செய்யவருகின்றது.இதற்கு துணையாக இராணுவத்தினரை பயன்படுத்துகின்றனர்.

பௌத்த தர்மம் என்பது மிகவும் உயர்ந்த தர்மம்.நல்ல அறக்கருத்துகளை கொண்ட சமயம்.ஆனால் இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான பௌத்த பிக்குகள் அதர்மத்தினையே போதித்துவருகின்றனர்.அவர்கள் தர்மத்தினைப்போதிப்பவர்களாகயிருந்தால் அட்டூழியங்களை செய்யவரமாட்டார்கள்.

இன்று சிங்கள மயப்படுத்தவேண்டும்,வடகிழக்கில் விகாரைகளை பரவலாக அமைக்கவேண்டும்,தமிழர்களின் பூர்வீகம் என்று நிரூபிப்பதற்கு மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டுவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இரகசியமாகவரும் அமைச்சர்கள் இங்கு சிங்களவர்களு;கு இரகசியமான முறையில் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.அதற்கு எமது அரசியல்வாதிகளும் துணைநிற்கின்றனர்.இதனை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறான நிலைநீடிக்குமானால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலான பகுதி சிங்களமயமாக்கப்பட்டுவிடும்.அவ்வாறான நிலையேற்பட்டாதல் எமது சந்ததிக்கு வாழ்வதற்கு இடமில்லாத நிலையே ஏற்படும்.

# கல்முனை மாநகர சபையில் அமளி துமளி



கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை இம்மாத இடம்பெற்ற போது ஒரு கட்டத்தில் மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ். சந்திர சேகரம் ராஜனுக்குமிடையே பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு சபை அமர்வு பரபரப்புக்குள்ளாகியது.

கல்முனை மாநகர சபையின் குறித்த சபை அமர்வு மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில், (செவ்வாய் பிற்பகல்) சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

ஒரு கட்டத்தில் அமர்வில் உரையாற்ற எழுந்த உறுப்பினர் சந்திர சேகரம் ராஜன் தமது 12 ஆவது வட்டாரத்திற்குள் அமைந்திருக்கும் பொது மயானத்திற்கு மதில் சுவர் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மாநகர சபை அனுமதி வழங்கத் தாமதமாவதால் திரும்பிச் சென்றுவிடும் நிலையுள்ளதாகத் தெரிவித்ததுடன், கிடைக்கப் பெற்றுள்ள 13 இலட்சம் ரூபா நிதியில் குறித்த மயானத்தின் முன்பக்க மதிற் சுவரே அமைக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

அத்துடன் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னரே மாகாண விசேட உதவித்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கிடைத்தும் மாநகர சபை தாமதியாது வழங்க வேண்டுமெனவும் கோரினார்.

இந்த விடயத்தில் அடிவருடிகள், கொள்ளைக் கும்பல்களின் குறுக்கீட்டுக்கும், சில அரசியல் இலாபம் தேட முனைவோருக்கும் இடமளிக்க வேண்டாமெனவும் அவர் கூறினார்.

தாம் 12 ஆம் வட்டார உறுப்பினரென்பதாலும், எனது வட்டாரத்திற்குள்ளேயே குறித்த மயானம் அமைந்திருப்பதாலும், அங்குள்ள ஆலய முக்கியஸ்தர்கள், கழகங்கள் முன்பக்க மதிற் சுவரே அமைக்கப்பட வேண்டுமெனக் கோரி கடிதங்களை என்னிடம் தந்துள்ளதாலும் கட்டுவதற்கு அனுமதிக்குமாறும் சந்திரசேகரம் ராஜன் வாதிட்டார்.

இதன் போது பொது மயானம், மாநகர சபையின் சொத்து எனக் கூறிய மேயர் றகீப் இந்த மதிற் சுவர் நிர்மாண விடயத்தில் உங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளை பேசித் தீர்த்து ஒரு முடிவுடன் வாருங்கள் 100 வீதம் நான் உறுதுணையாக இருப்பேன். நிதியை வீணான வாதங்களால் திரும்பிச் செல்ல விடாதீர்கள் என கூறினார்.

எனினும் மேயருக்கும் உறுப்பினர் ராஜனுக்குமிடையில் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து சபையில் பெரும் அமர்க்களமே ஏற்பட்டது.

நிலமை இப்படி தொடரும் வேளை மயானம் பொதுச் சொத்து எனவும், 12 ஆம் வட்டாரத்தில் அது அமைந்திருப்பதால் தான் சொல்வது போல் தான் நடக்க வேண்டுமென உறுப்பினர் ராஜன் வாதிட முடியாது என கூறிய மேயர் றகீப், எழுந்து நின்றவாறு வாதிட்ட உறுப்பினர் ராஜனை அமருமாறு பணித்தார். மேலும், இது அஜந்தாவில் இடம் பெறாத விடயம் எனக்கூறிய மேயர் அவரை ஆசனத்தில் அமருமாறு பணித்தார். மேயர் மீண்டும், மீண்டும் ராஜனை அமருமாறு கூறியும் 'நான் அமரமாட்டேன்'என அவர் விடாப் பிடியாக அடம்பிடித்துக் கொண்டிருந்தமையால், மேயர் சிறிது நேரம் ஆசனத்தை விட்டு எழுந்து சென்றார்.

இச்சம்பவம் பெரும் பரபரப்பையும், தர்க்கத்தையும் ஏற்படுத்தியிருந்தும், ஒரு சிறு இடைவேளையின் பின்பு சபை மீண்டும் ஆரம்பமாகி அமைதியாக நடைபெற்று நிறைவுற்றது.

# கல்லாற்று பிரச்சினைக்குத்தீர்வு



**(எருவில் துசி)**

பெரியகல்லாறு விளையாட்டு மைதானத்தில் கடினப்பந்து விளையாடுவது தொடர்பாக கடந்த மூன்று மாதமாக ஏற்பட்டு வந்த சர்ச்சைக்கு நேற்று (29) பிரதேச சபையின் விஷேட சாதாரன கூட்டத்தில் தீர்வு கானும் பொருட்டு தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில் ஆராயப்பட்டது.

பெரியகல்லாறு விளையாட்டு மைதானத்தில் கடினப்பந்து விளையாடுவதனால் பாதிப்புக்கள் ஏற்படுவதாக அப்பிரதேசதை சேர்ந்த நாகதம்பிரன் ஆலய பரிபாலன சபையினரும் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் வசித்து வரும் பொது மக்களும் சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தமைக்கு அமைவாக சபையின் தீர்மானப்படி பிரதேச விளையாட்டு அதிகாரியின் அறிக்கையினை பெற்று அதன்படி செயற்படுமாறு கோரியதற்கு அமைவாக விளையாட்டு அதிகாரி குறித்த மைதானத்தில் விளையாடுவது தொடர்பாக சாதக பாதக அறிக்கையினை சமர்ப்பித்திருந்தார். அதற்கமைய தற்காலிகமாக கடினப்பந்து விளையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டது. இந்த தடையினை அகற்ற கோரி விளையாட்டுக் கழகங்கள் போர்கொடி தூக்கியது. இதன் விளைவாக கழங்களை அழைத்து இவ்விடயம் தொடர்பாக கருத்தறியும் வகையில் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் தவிசாளருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக கூட்டம் நடைபெறாது என அறிவிக்கப்பட்ட நிலையில் அங்கு கூடிய கழகங்கள் அரசியல் தலைவர்களுக்கு அறிவித்த நிலையில் களத்துக்கு உடன் வந்த சாணக்கியன் அவர்கள் சபையில் இருந்த அதிகாரிகளை அழைத்து தீர்வு கான எத்தனித்த போது பொறுப்பு கூறக்கூடிய நிலை காணப்படாது போன காரணத்தினால் கழக உறுப்பினர்கள் கிழர்தெழுந்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து 21.10.2021ந் திகதி உப தவிசாளர் திருமதி க.றஞ்சினி தலைமையில் கூடிய பிரதேச சபை அமர்வின் போது இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டது அதன் போது ஏற்பட்ட வாத பிரதிவாதங்களின் அடிப்படையில் 29.10.2021ந் திகதி விஷேட கூட்டம் கூட்டி தீர்வு காண்பது என்றும் அன்று பெரியகல்லாற்றுக்கு களவிஜயம் செய்து முறைப்பாட்டாளர்களின் கருத்தை பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. களத்துக்கு சென்ற போது குறித்த மக்கள் தமது கருத்துகளை பதிவு செய்திருந்தனர் குறித்த விளையாட்டை விளையாடுவதாயின் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தி விட்டு செய்யுமாறும் விளையாடுகின்றவர்கள் மைதானத்தினுள் விளையாடும் போது

அயலவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு விளையாட வேண்டும் எனவும் வார்த்தை பிரயோகங்கள் முறைமைப்படுத்தப்பட்டு அமைய வேண்டும் எனவும் கருத்து தெரிவித்னர். இது இவ்வாறிருக்க நேற்றைய (29) தினம் விஷேட கூட்டம் நடைபெற்ற போது தவிசாளரினால் அனைவரிடமிருந்தும் கருத்து கோரப்பட்டதற்கு அமைவாக கலந்து கொண்ட உறுப்பினர்கள் பத்து பேர் தடையை நீக்க வேண்டும் எனவும் இருவர் தடையினை நீக்குவது தற்போதைய சூழ்நிலையில் பொருத்த மற்றது எனவும் இருவர் நடுநிலையாக செயற்பட்டதன் பிரகாரம்

தவிசாளரினால் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துப்படி தடையை நீக்குவது என்றும் தீர்வு எட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் 600 ஏக்கர் விவசாய காணிகள் விடுவிப்பு:

## மாவட்ட அரசாங்க அதிபரினால் விவசாய நடவடிக்கை அங்குரார்ப்பணம்





**திருமலை ரவ்பீக் பாயிஸ்**

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இறால்குழி கிராமத்தில் ஏனைய காடுகள் விடுவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 600 ஏக்கர் அளவிலான விவசாயம் செய்வதற்கான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

நேற்று (29) இறால்குழி பிரதேசத்தில் விவசாயம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்வதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

பல வருட காலமாக விவசாயம் செய்யப்படாமல் இப்பிரதேசம் கைவிடப்பட்டதாக காணப்பட்டது. முன்னர் இப்பிரதேசங்களில் பயிர்ச்செய்கை மேற் கொண்டதாகவும் அதன் பின்னர் வன ஜீவராசிகள் திணைக்களம் உட்பட ஏனைய திணைக்களங்கள் பிரதேசத்துக்குள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்று பிரதேச விவசாயிகள் முன்னர் தெரிவித்திருந்தனர்

எனவே இப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான அனுமதியை தந்துதவுமாறு இப்பிரதேச விவசாயிகள் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து இப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக இதன்போது அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பயிர் செய்ய முடியுமான ஒவ்வொரு பிரதேசத்திலும் விவசாயசெய்கையினை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளதாகவும் . அதற்கிணங்க திருகோணமலை மாவட்டத்தில் விவசாயம் செய்ய முடியுமான பிரதேசங்கள் இனங்காணப்பட்டு, விடுவிக்கப்பட்டு , அப்பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இவ் வேலைத்திட்டத்திற்கு அமைய விவசாயம் செய்ய முடியுமான பிரதேசங்களை இனங்கண்டு அவற்றின் விவசாயம் செய்யவுள்ள தடையை நிவர்த்தி செய்து மக்களுக்கு விவசாயம் செய்வதற்கான அனுமதி வழங்குவதற்கான பொறிமுறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார்.

இதன் மூலம் மாவட்டத்தினுடைய உற்பத்தி அதிகரித்து மேலதிகமாக உற்பத்திகளை வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்கு வழங்க கூடியதாக அமையும். இதன் காரணமாக மக்களின் வாழ்வாதாரம் சிறப்பாக அமைந்து வருமான மட்டம் உயர்வடைய காரணமாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் ,பிரதேச அரசியல் பிரமுகர்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் விவசாய சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் ஏற்பாட்டில் குடிநீர் வழங்கும் திட்டம்





**(ந.குகதர்சன்)**

மட்டக்களப்பு சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் ஏற்பாட்டில் குடிநீர் வழங்கும் திட்டத்தில் கல்குடா தொகுதியில் குழாய் கிணறு கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கல்குடா மற்றும் கொண்டயன்கேணி ஆகிய இரண்டு இடங்களில் குழாய் கிணறு பயனாளிகளுக்கு கையளிப்பு செய்யப்பட்டது.

குறிந்த நிகழ்வில் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மற்றும் கழக தளிர் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவ் குழாய் கிணறுகளுக்கான நிதியுதவியினை கனடாவில் வாழும் வீடு விற்பனை முகவர் மோகன் கம்றசன் நிதியினை வழங்கி வைத்துள்ளார்.

# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீனை காண ஆவலுடன் அணிதிரண்ட வவுனியா மக்கள்







**ஆறுமாத சிறைவாழ்க்கை ஏற்படுத்திய இடைவெளி, ஆதரவாளர்களின் தொடர்புகளை நீட்டியிருந்தாலும் அன்பின் கனதியை குறைக்கவில்லை. சிறை மீண்ட செம்மலாக, நேற்று (29) தனது சொந்த தேர்தல் மாவட்டத்துக்குச் சென்றுள்ள, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாட் பதியுதீனை அங்குள்ள மக்கள் ஆரத்தழுவி, ஆனந்தத்தை வெளிப்படுத்தினர்.**

**நேற்று மாலை (29) வவுனியா, சாளம்பைக்குளம் பகுதிக்கு விஜயம் செய்த தலைவர் ரிஷாட், மக்களுடன் அளவளாவினார்.**

**கட்சித் தொண்டர்கள் ஆதரவாளர்கள், தாய்மார்கள், சிறுவர்கள், சமூகநல விரும்பிகள், சமூகப்பற்றாளர்கள் என பல்வேறு மட்டத்தினரும், தங்களது தலைமையைக் காண அங்கு ஆவலுடன் குழுமியிருந்தனர்.**



**அங்கு வருகை தந்திருந்தவர்கள், தலைவரின் சுகநலன்களை விசாரித்ததுடன், அவரை ஆரத்தழுவி முஸாபஹா செய்தனர். அங்கு வந்திருந்த தாய்மார்கள் கூட, தமது தலைமை மீதான பற்றை கண்ணீர் மல்க வெளிப்படுத்தியிருந்தனர்.**

**அந்தச் சந்தர்ப்பத்தில், மக்களுடன் அளவளாவிய தலைவர் ரிஷாட் பதியுதீன், தனக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.**


# அன்பான வாசகர்களுக்கு



இம்மாதம்
தொடக்கம் சுபீட்சம்
நிகழ்நிலைப்பத்திரிக்கை
சிலவாரங்களுக்கு
வாரத்தில் திங்கள்,
புதன், வெள்ளி ஆகிய
தினங்களில்
மாத்திரமே வெளிவரும்.
உடனடிச்செய்திகளுக்கு
www.supeedsam.com
எனும் எமது
செய்தித்தளத்துடன்
இணைந்திருங்கள்


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை – 03

# மூத்த நாடகக் கலைஞர் கலாபூணம்
# தம்பு மயில்வாகனம்
# கலைஞரின் சாதனைப் பயணம்

**எந்தக்** கருத்துக்களையும் இலகுவாக மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சொல்லத்தக்க ஓர் ஊடகமாக நாடகத்துறை விளங்குகின்றது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்களில் ஒன்றாக நாடகத்தை முன்னிறுத்தி தொன்றுதொட்டு தமிழர் நாடகக் கலையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ் பாரம்பரிய நாடகக் கலையானது தமிழரின் சூழமைவு கதைகளையும், அழகியலையும், கலை நுட்பத்தையும் வெளிப்படுத்துகின்றன. இதன் மூலமாக சமூகத்திற்கு தேவையான பல விடயங்களை காட்சியாக நம் முன்னே பிரதிபலிக்கின்றது. அந்த வகையில், 1940ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அச்செழு எனும் இடத்தில் பிறந்து திருக்கோணமலையில் வசித்து வருபவரும், சிறுவயது முதல் நடிப்புத்துறையில் இருந்த ஈடுபாட்டின் காரணமாக தனது 15ஆவது வயதில் பாடசாலைக் காலத்தில் ‘திருவிளையாடல்’ என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் தனது கலைப் பிரவேசத்தை ஆரம்பித்து அதன் பின்னர் பல நாடகங்களிலும், இலங்கை வானொலி, ரூபவாஹினி தொலைக்காட்சி என்பவற்றில் நாடக நடிகராக 50 வருடங்களுக்கு மேலாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டவரும், திருக்கோணமலை தொலைபேசி திணைக்களத்தில் ஓய்வு பெற்ற எழுது வினைஞரும், 2016ம் ஆண்டில் அரசவிருது நாடகத்துறைக்காக திருக்கோணமலை மண்ணில் கலாபூஷணம் விருதைப் பெற்றுக் கொண்டவருமான மூத்த நாடகக் கலைஞர் தம்பு மயில்வாகனம் அவர்களின் சாதனைக் கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.



இவர் திருக்கோணமலை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். இவரைக் கற்பித்து ஆளாக்கிய கலை ஆர்வமிக்க ஆசிரியர்களின் தூண்டுதல் இவரை நாடகப்பிரியன் ஆக்கியது. 1954 இல் ஆசிரியர் கதிரவேல் பிள்ளை அவர்கள் இந்துக் கல்லூரியில் மேடையேற்றிய திருவிளையாடல் நாடகத்துறையில் இவரது முதற் பிரவேசம் ஆரம்பித்தது. இதன் மூலமாக பாடசாலைகளில் மேடையேற்றப்படும் நாடகங்களில் நடிப்பதில், நெறிப்படுத்துதலில் அதீத ஈடுபாடு இவருக்கு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து திருக்கோணமலையின் உள்ளூர் மேடை நாடகங்கள் பலவற்றில் நகைச்சுவை நடிகராகவும், ஒரு சில நகைச்சுவை நாடகங்களை எழுதித் தயாரித்து நடித்தும் உள்ளார். 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற வானொலி நடிகர் தேர்வில் சித்தியடைந்து 100க்கும் மேற்பட்ட நாடகங்கள் பலவற்றிலும் நடித்துள்ளார் அவற்றுள் ‘பொங்கலோ பொங்கல்’, ‘சங்கக்கடை’ என்பன புகழ் பெற்றவை. அவ்வாறே ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆரம்பித்த காலத்தில் அதன் தொலைக்காட்சி நாடகங்கள் பலவற்றிலும் நடித்துள்ளார். அவற்றுள் ‘ஊருக்கு உழைப்பவன்’, ‘புதுவருடக்கனவு’, ‘அறிவில் ஆதவன்’, ‘வந்தது வசந்தம்’ போன்ற நாடகங்கள் புகழ் பெற்றவை. இவ்வாறாக இவரது நாடகத்துறைப் பயணமானது பயணிக்கத் தொடங்கியது.

1955ஆம் ஆண்டு பாடசாலைக் காலப்பகுதிகளில் திருவிளையாடல், கோவலன் கண்ணகி, தேரோட்டி மகன், 1960 ஆம் காலப் பகுதிகளில் சக்கடத்தார் சந்திப்பு, விதானையார் வீடு, சாவே நீ வா, இதயநிலா, என்னடி கோமளா, மாலா, 19%0 ஆம் காலப்பகுதிகளில் காதலே நீ வாழி, பட்டது போதும், பரீட்சை முடிவு, சாமியும் தம்பிரானும், தவறான பாதை போன்றவைகளும், அவற்றுள் இவரே எழுதித் தயாரித்து மேடையேற்றிய நாடகங்களில் புகழ் பெற்ற நாடகங்களாக ‘பட்டது போதும்’ நாடகம் திருக்கோணமலை புனித ஜோசப் கல்லூரி மண்டபத்தில் றோட்டரி கழகம் ஆண்டு விழாவுக்காக மேடையேற்றப்பட்டதுடன், ‘பரீட்சை முடிவு’ நாடகம் இந்துக் கல்லூரி சம்பந்தர் ஞாபகார்த்த மண்டபத்திலும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாடகத்துறையில் இவருக்கு பல விருதுகளும், பாராட்டுக்களும் கிடைக்கப் பெற்றன. அவ் வகையில், 19%5இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நடிகர் சங்க அங்கத்தவர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் வானொலியில் நடித்தல், கதை எழுதுதல்களுக்கான் பங்கு பற்றியமைக்காக சான்றிதழ் கிடைக்கப் பெற்றது. 1979ஆம் ஆண்டில் ‘காதலே நீ வாழி’ எனும் நாடகம் திருக்கோணமலை, மட்டகளப்பு போன்ற மாவட்டங்களில் தெரிவாகி அகில இலங்கை நாடகப் போட்டியிலும் பங்குபற்றி கொழும்பு மத்திய வங்கி இலக்கிய மன்றத்தினால் பாராட்டப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் மக்கள் வங்கி விளம்பரத்திற்காக ஒலிபரப்பப்பட்ட ‘தனியாத தாகம்’ எனும் 2 வருட தொடர் நாடகத்தில் நடித்தமைக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ‘பட்டது போதும்’ நகைச்சுவை நாடகத்தை திருக்கோணமலை றோட்டரிக் கழகத்திற்கு தயாரித்து நெறிப்படுத்தியமைக்காக சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து திருக்கோணமலை பிரதேச செயலகத்தினால் பிரதேச சாகித்திய விருதும், திருக்கோணமலை நகராட்சி மன்றத்தினால் நகரமுதல்வர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. 2016இல் கலாபூஷணம் விருதும் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் மற்றவர்களின் படைப்புகளுக்கும் தனது பங்களிப்பினை வழங்கியுள்ளார். திருக்கோணமலை கலைவட்டம் நாடக மன்றத்தின் கவிஞர். மதிவதனின் சாவே நீ வா, என்னடி கோமளா, காதலே நீ வாழி, இதய நிலா போன்ற பல நாடகங்களை நெறிப்படுத்தியும், நடித்தும் பங்களிப்புச் செய்துள்ளார். இவருக்குப் பேரப்பிள்ளைகளான சோபாஸ்னி, வர்சாஸ்னி மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், மானிப்பாய் பெண்கள் பாடசாலையிலும் கல்வி கற்று வருகின்றனர். இசை, பேச்சு, நாடகம், நடனம் என்பவற்றில் அதீத ஈடுபாடு கொண்டு அங்குள்ள ஆசிரியர்களினால் வழி நடாத்தப்பட்டு வருகின்றதோடு இவரால்; கலைக்காக செய்யவிருந்த செயற்பாடுகளையும், இவருக்குப் பின் இத்துறையைத் தொடர்வதற்கும் அவர்களை இவர் ஊக்கப்படுத்தி அதற்கான முயற்சிகளையும் செய்து வருகின்றார் எனக் குறிப்பிட்டார்.

இவரது நாடகக்கலை மீதான பார்வையானது தற்கால சமுதாயமானது தென்னிந்தியாவின் சினிமா வாழ்க்கைக்கு அடிமையாகி உள்ளது. சின்னத்திரை, வெள்ளித்திரை என சினிமாவும், தொலைக்காட்சி நாடகங்களும் போட்டிப் போட்டுக் கொண்டு இரவு பகலாக தொடர்ந்து காட்சிப்படுத்துவதனால் எம் போன்ற மேடைக் கலைஞர்கள் வெகு விரைவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மற்றும் பாடசாலை மாணவர்களும், இளைஞர்களும் இதற்கு அடிமையாகி வருகின்றனர். நமது பாரம்பரியக் கலை வடிவங்களை பார்ப்பதிலும், அவை பற்றிய விபரங்களை பிள்ளைகளுக்கு தெரிவிப்பதில் பெற்றோர்களும் முன்னிற்பதில்லை. காரணம் நவீனமயமாக்கப்பட்ட உலகத்தில் பண்டைய கலைகள் மருவியடைந்து சென்று கொண்டிருக்கின்றன. கலையில் ஈடுபடுவதற்கும் அக்கலையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் பணத் தேவை அதிகரித்து விட்டது. அதனால் சிறந்த கலைஞனும் தன்னிடம் திறமை இருந்தாலும் பொருளாதார கஸ்டத்தின் நிமித்தம் தன் கலையை விடுத்து கிடைக்கின்ற தொழிலை செய்கின்றான். எக் கலையாக இருந்தாலும் நமது பாரம்பரியக் கலைகள் சமூகத்தில் வளர்த்தெடுப்பதற்கு ஒவ்வொரு தமிழனும் முயற்சியும், கடின உழைப்பும் மேற்கொள்ள வேண்டும். மேலும் கலைகளுக்கு பொறுப்பான அதிகாரிகளும், ஊடகங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என இக் கலைஞர் குறிப்பிட்டார்.



திருக்கோணமலை மண்ணில் நமது பாராம்பரிய கலைகள் மருவியடைந்து செல்வதற்கான அவரது கருத்துப் பகிர்வானது, நாடகம் என்பது பாட்டும், உரையும், நடிப்பும் என்பது தமிழ் மரபு வழி கூறும் இலக்கணமாக விளங்குகின்றது. நாடகம் உடல் என்றால் அதன் கருத்து உயிர் எனலாம். நாடகக் காட்சியமைப்பு எலும்புக்கூடு எனலாம். உரையாடல் தசைநார், குருதி எனலாம். அதாவது சமூகத்திற்கு தேவையான ஒரு நாடகத்தை மக்கள் முன் காட்சியாக ஒவ்வொரு பாத்திரப் படைப்பின் மூலமாக வெளிப்படுத்தும் போது ஒவ்வொரு மனிதனின் மனதிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முனையும் சக்தி நாடகத்துறைக்கு உள்ளது. மேலும் ஒரு செறிவான தளத்தில் மேற்கொள்ளப்படும் போது நாடக முயற்சிகள் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வழி வகுக்கும். அவ் வகையில், நமது மண்ணின் பழமைமிக்க கலைகளை எம் பிரதேசத்தில் நடாத்தப்படும் கலை விழாக்கள், பாடசாலை நிகழ்ச்சிகள் என்பவற்றில் கண்டு களிப்பதே மிக அரிதாகிக் கொண்டே செல்கின்றது. நடன அரங்கேற்றங்கள் மிகையாக இருந்தாலும் நாட்டுக் கூத்துக்கள், மேடை நாடகங்கள், வாத்தியக் கச்சேரிகள் என்பவற்றை மேற்கொள்வதில் மாணவர்களும், இளைஞர்களும் ஆர்வம் காட்டுவதுமில்லை, பங்குபற்றுவதும் இல்லை. இதற்கு கலை சம்மந்தப்பட்ட ஆசிரியர்களும், பாடசாலை நிர்வாகமும் மாணவர்களின் மூலம் நம் மண்ணின் கலைகளை வளர்த்தெடுக்க ஆழமான முயற்சிகளை மேற்கொள்ள இணங்க வேண்டும். ஒரு வருடத்திற்கு ஒருமுறையாவது நம் கலைகளை மேடையேற்றி அரங்கேற்ற அரச நிறுவனங்கள் பொறுப்பெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நிறைவாக, நாடகத் துறையை விரும்பி கற்றுத் தேர்ச்சி அடையுங்கள். அதன் மூலமாக நாளைய சமுதாயத்திற்கு முன்னோடியாக திகழ்வீர்கள். மாணவர்களே நாட்டின் நாளைய எதிர்காலம். எக் கலையாக இருந்தாலும் அக் கலை மீது ஆர்வம் காட்டி பயிலுங்கள், வெற்றி அடையுங்கள் என தனது எதிர்பார்ப்பினைக் குறிப்பிட்டார்.

**தொகுப்பு :- திருமலை**
**தட்சாயினி ஞானசங்கரன்**

# பெரும்பாலான பௌத்த பிக்குகள் அதர்மத்தினையே போதித்து வருகின்றனர்

செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேரத்தடி என்னும் தமிழர் பகுதிக்குள் தொல்பொருள் செயலணியினால் எல்லைக்கற்கல் நடுவதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தொல்பொருள் செயலணியினர் எல்லைக்கற்கள் நடுவதற்காக வந்துள்ள விடயத்தை அறிந்த வந்தாறுமூலை மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சியினர் அப்பகுதிக்கு சென்று தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்குசென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீனித்தம்பி யோகேஸ்வரன் மற்றும் சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார், ஏறாவூர்ப்பற்று பிரதேசசபை தவிசாளர் சர்வானந்தன் , தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி வடகிழக்கு தலைவர் கி.சேயோன், ஏறாவூர்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் மக்களுடன் இணைந்து தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து அப்பகுதியில் தொல்பொருள் செயலணியின் எல்லைக்கற்களை நடும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டு அங்கிருந்து சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், தமிழர்களின் பல இடங்கள் தொல்பொருள் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்றது. கோத்தபாய ராஜபக்ஸ ஆட்சிக்கு வந்ததும் நூறுவீதம் சிங்களவர்களைக் கொண்டதாகவும் இராணுவத்தினரையும் பௌத்த பிக்குகளையும் உள்ளடக்கியதாக ஒரு செயலணியை அமைத்து தொல்லியல் அடையாளங்களை கண்டுபிடித்து அதனை பௌத்த மக்களுக்கு உரியதென அடையாளப்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளார்.

அதன் பிரகாரம் தொல்லியல் துறையினர் வடகிழக்கில் தமிழர்கள் வாழும் பல இடங்களில் தங்களது பௌத்த இடங்களாக அடையாளப்படுத்தி வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலை, வேரம் என்னும் பகுதியில் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களுக்கு வந்து இது தங்களின் பகுதி இங்கு தொல்பொருள் அடையாளங்கள் இருக்கின்றது என காட்டுகின்றனர்.

பழங்கால செங்கல் இருந்த இடமெல்லாம் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறுகின்றார்கள். இலங்கையில் பூர்வீகமாக தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நாடு பூர்வீக தமிழர்களின் வாழ்விடமாகும். தமிழ் மக்கள் இந்த நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வாழ்ந்தார்கள். பழங்காலத்தில் பௌத்தர்களுக்கு ஒருவிதமாகவும் தமிழர்களுக்கு ஒருவிதமாகவும் செங்கல் உற்பத்திசெய்யப்படவில்லை. அக்காலத்தில் அனைவருக்கும் பொதுவானதாகவே செங்கற்கல் இருந்தன. ஆனால் தற்போது அந்த செங்கற்களை மையமாககொண்டு பௌத்தர்களின் வாழ்விடங்கள் என்று கூறுகின்றனர். இலங்கையின் முதலாவது மன்னனும் தமிழன்தான். இறுதி மன்னனும் தமிழனாகவே இருந்துள்ளான். தமிழர்கள் இந்த நாட்டினை ஆட்சி செய்துள்ளார்கள். அவ்வாறானவை தமிழர்களின் தொல்பொருள் இடங்களாக இருந்தால் அதனை தமிழர்களுடன் கலந்துரையாடி அவற்றினை பாதுப்பதில் எந்த தடையும் இல்லை. ஆனால் எங்கு பழங்கால செங்கற்கள், பழங்கால கல்தூண்கள் காணப்படுகின்றதோ அவற்றினையெல்லாம் பௌத்தர்களின், சிங்களவர்களின் வாழ்விடங்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். பொலநறுவையில் 18 இந்து ஆலயங்கள் குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள் உள்ளன. அவ்வாறானால் ஏனைய பகுதிகளில் பெருமளவான சைவ ஆலயங்கள் இருந்திருக்க வேண்டும். இன்றும் பல ஆலயங்கள் அழிவுகளுடன் அங்கு இருக்கின்றன. அவற்றினை வைத்துக்கொண்டு இன்று நாங்கள் பொலநறுவைக்கு சென்று தமிழர்கள் உரிமைகொண்டாட முடியுமா?.

இன்று அநுராதபுரத்தில் உள்ள இசுறுமுனிய விகாரை அதுவொரு சைவசிவன் ஆலயம். இன்று அவர்கள் அதனை விகாரையாக மாற்றியுள்ளனர். இன்று தென்பகுதியில் உள்ள மிகவும் பழமையான பல சைவ ஆலயங்கள் பௌத்த விகாரைகளாக மாற்றப்பட்டுள்ளன. தமிழர்கள் இவற்றினையெல்லாம் கேட்டுச்செல்வதுமில்லை, எங்களது இடமென்று சண்டை பிடிக்கவுமில்லை. எங்களது பகுதியென்று தொல்பொருள் பிரகடனப்படுத்துங்கள் என்று கூறவுமில்லை. இவ்வாறு இருக்கும் போது ஏன் வடகிழக்கு தமிழர் பூர்வீக பகுதியில் மட்டும் ஏன் அரசாங்கம் இவ்வாறான அட்டூழியங்களை செய்ய வருகின்றது. இதற்கு துணையாக இராணுவத்தினரை பயன்படுத்துகின்றனர்.

பௌத்த தர்மம் என்பது மிகவும் உயர்ந்த தர்மம். நல்ல அறக் கருத்துகளை கொண்ட சமயம். ஆனால் இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான பௌத்த பிக்குகள் அதர்மத்தினையே போதித்து வருகின்றனர். அவர்கள் தர்மத்தினைப் போதிப்பவர்களாகயிருந்தால் அட்டூழியங்களை செய்யவரமாட்டார்கள்.

இன்று சிங்கள மயப்படுத்த வேண்டும், வடகிழக்கில் விகாரைகளை பரவலாக அமைக்க வேண்டும். தமிழர்களின் பூர்வீகம் என்று நிரூபிப்பதற்கு மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இரகசியமாகவரும் அமைச்சர்கள் இங்கு சிங்களவர்களுக்கு இரகசியமான முறையில் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதற்கு எமது அரசியல்வாதிகளும் துணை நிற்கின்றனர். இதனை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறான நிலைநீடிக்குமானால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலான பகுதி சிங்களமயமாக்கப்பட்டுவிடும். அவ்வாறான நிலையேற்பட்டால் எமது சந்ததிக்கு வாழ்வதற்கு இடமில்லாத நிலையே ஏற்படும்.










நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# போத்துவில் நாவலாறு காணி தொடர்பான ஆவணங்கள் போத்துவில் கமநல கேந்திர நிலையத்திற்கு மாற்றம்



(நிந்தவூர் நிருபர்)

பல தசாப்தங்களாக பொத்துவில் பிரதேச விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்டு வந்த நாவலாறு தெற்கு பிரதேச காணிகள் தொடர்பான அனைத்து கோப்புக்களும், ஆவணங்களும் சில ஆண்டுகளுக்கு முன்னர் பாணம கமநல கேந்திர நிலையத்துக்கு மாற்றப்பட்டிருந்தன.

இதன் காரணமாக பொத்துவில் பிரதேச விவசாயிகள் தமது காணி தொடர்பான சேவைகளை பெற பாணம கமநல கேந்திர நிலையத்துக்கு செல்ல வேண்டி இருந்தது டன் விவசாயிகள் தமது முறைப்பாடுகளை அளிப்பதில் மொழி சார்ந்த சிரமங்களையும் எதிர்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இப்பிரச்சினைகள் விவசாய சங்கங்கள் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, நேற்று (29) அதற்கான தீர்வு கிடைத்திருப்பதில் விவசாயிகளும் கமநல உத்தியோகத்தர்களும் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளதாக விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பாணம கமநல கேந்திர நிலையத்திலிருந்த பொத்துவில் பிரதேச விவசாயிகளின் கோப்புகள், ஆவணங்களை மீண்டும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2021.10.28. ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் அவர்களின் உதவியால் பொத்துவில் கமநல கேந்திர நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

குறித்த பிரச்சினைக்கு விரைவாக தீர்வினை பெற்று தந்தமைக்காக சம்பந்தப்பட்ட 7 விவசாய அமைப்புக்களின் சார்பாகவும் 7 விவசாய அமைப்புக்களின் போடிமார்கள் சார்பாகவும் நாவலாறு தெற்கு விவசாய அமைப்புக்களின் சம்மேளனம் சார்பாகவும் பயனாளிகள் பாராளுமன்ற உறுப்பினருக்கு பாராட்டுகளை தெரிவிக்கின்றனர்.

மேலும் இறத்தல் விவசாய அமைப்புக்கு 1ஓட் கொங்கிறீட் பாதை அமைப்பதற்கு நிதியுதவி வழங்கியமைக்கும் இறத்தல் விவசாய அமைப்பின் போடிமார்கள் தமது நன்றியறிதலை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அரசாங்கத்திற்கு எதிராக திருகோணமலையில் இலங்கை மின்சார சபை ஊழியர்க ஆர்ப்பாட்டம்

## கையொப்பமும் சேகரிப்பு...

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

இலங்கை மின்சார சபையின் கிழக்கு மாகாண காரியாலயத்திற்கு முன்பாக இலங்கை மின்சார சபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று காலை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது கெரவலபிட்டிய மின் நிலையத்தின் 40 வீத பங்கு இறக்குமதி மற்றும் விநியோகத்தின் மீதான ஏகபோகம் அமெரிக்கவிற்கு விற்பனை செய்வதினை கண்டித்து இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது

இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டணி இவ் ஆர்பாட்டத்தினை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது மேலும் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஏகபோகம் அமெரிக்காவிற்கு, நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தில், எதிர்கால மின் உற்பத்தி நிலையங்கள் அமெரிக்காவிற்கு விற்கப்படும், ஃ.மீ.ஈ பங்குகளை விற்பனை செய்வதினை உடனடியாக நிறுத்து என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பினை இலங்கை மின்சார சபை ஊழியர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்

மேலும் இவ் ஆர்ப்பாட்டத்தின்போது இலங்கை மின்சார சபை ஊழியர் ஒருவர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அரசாங்கத்துக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டமாக காணப்படுகின்றது காரணம் இலங்கை மின்சார சபையின் கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பகுதிகளில் 40 வீதமான பங்குகளை அமெரிக்க நாட்டிற்கு விற்பனை செய்ய அரசாங்கம் தயாராகி வருகின்றதாகவும், அவ் செயற்றப்பட்டினை கண்டித்து மின்சார சபை ஊழியர்களும் பொதுமக்களும் சேர்ந்து இதனை வன்மையாக கண்டிக்கின்றோம் எனவும் அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்தார்

மேலும் அமெரிக்காவின் ஆதிக்கம் எமது நாட்டில் சூழ்ந்து கொள்கிறது என்றும் இவ் ஆர்ப்பாட்டத்தின்போது கடந்த மாதம் அரசாங்கத்தினால் நடு இரவில் கைச்சாத்திடப்பட்ட கெரவலபிட்டிய மின்நிலையத்தின் பங்குகளை உடனடியாக நிறுத்துமாறும் அவ்வாறு இவ் ஒப்பந்தத்தினை உடன் நிறுத்தாவிட்டால் எதிர்வரும் நாட்களில் பாரியளவிலான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் இவ்வாறு வெளிநாடுகளுக்கு பங்குகளை விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ் அமைதி ஆர்ப்பாட்டம் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்றதுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை மின்சார சபை ஊழியர்களினால் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டு மகஜர் ஒன்றும் தயார்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# திருமலை கப்பல்துறை

## தி/சரஸ்வதி வித்தியாலயத்திற்கு குடிநீர்



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாடளாவிய ரீதியில்கோவிட் சூழலுக்கு மத்தியில் நாட்டின் ஆரம்ப பிரிவு பாடசாலைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளதினை கருத்துட்கொண்டு இநூஎஜஈ-19 கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்தும் நோக்கில் கப்பல்துறை தி/சரஸ்வதி வித்தியாலயத்தி குடிநீர் தொகுதி கையளிக்கப்பட்டது

சரஸ்வதி வித்தியாலயத்தின் அதிபர் தலைமையில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களினால் கையளிக்கப்பட்டது

கடந்த காலங்களாக பாடசாலையில் நிலவிவந்த நீர்தாங்கி பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் அதிபர், அப்பகுதி சங்கங்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து கோரிக்கையினை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களிடம் முன்வைத்திருந்தனர். அதன் பிரதிபலனாக அல் ஹித்துமத்துல் உம்மா அமைப்பின் அனுசரனையுடன் இவ் குடிநீர் தொகுதி



அமைக்கப்பட்டு சுகாதார வழிமுறையினை பின்பற்றி திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களினால் உத்தியாகபூர்வமாக இன்று கையளிக்கப்பட்டது.

பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இதன்போது தமது நன்றியினை தெரிவித்ததுடன் இந்நிகழ்வில் கப்பல்துறை தி/சரஸ்வதி வித்தியாலயத்தின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தம்பலாகாமம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோன்றிய பத்து சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(எப்.முபாரக்)

திருகோணமலை தம்பலாகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோன்றிய பத்து சந்தேக நபர்களை அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது உத்தரவிட்டார்.

தம்பலாகாமம், முள்ளிப்பொத்தானை, குளியாப்பிட்டி, வத்தளை, குருணாகல், மற்றும் அம்பாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த 46, 48, 40, 38, 41, 55, 38, 54, 32, மற்றும்43 வயதுகள் உடைய பத்துப் பேரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தம்பலாகாமம் ஐயனார் தீவு பகுதியில் புதையல் தோன்றிய நிலையில் தம்பலாகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பத்து சந்தேக நபர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களிடமிருந்து புதையலை கண்டறிவதற்கான ஸ்கேன் இயந்திரம், மண்வெட்டி, கூடைகள் பிக்காசு இயந்திரங்கள் போன்றவற்றினையும் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களை தம்பலாகாமம் பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# அம்பாரை மாவட்டத்தில் ரன்பிம காணி வழங்கும் திட்டத்தின் ஊடாக காணிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

(திருக்கோவில் நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு வீட்டுக்கு வீடு காணி உறுதி வழங்கும் தேசிய கொள்ளைத் திட்டத்தின் ஊடாக காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன அவர்களினால் அம்பாரை மாவட்டத்தில் காணி உறுதிகள் இன்று வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேசத்தில் கிழக்கு மாகாண காணி சீர் திருத்த ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பில் இன்று வெள்ளிக்கிழமை வீடு வீடாகச் சென்று வழங்கப்பட்டு இருந்தன.

அரசாங்கத்தின் ரன்பிம சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் காணியில்லாத மக்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு இருந்தன.



இதன்போது சம்பிரதாய ரீதியாக நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு இவ்வாறு காணி அமைச்சரினால் இன்றைய தினம் திருக்கோவில் விநாயகபுரத்தில் இடம்பெற்ற மாவட்ட மாட்ட நிகழ்வின் போதே வழங்கி வைக்கப்பட்டு இருந்தனர்.



இதன்போது அம்பாரை மாவட்டத்தில் உள்ள அட்டாளைச்சேணை திருக்கோவில் பொத்துவில் மற்றும் லாகுகல ஆகிய பிரதேச செயலகங்களில் வாழும் தமிழ் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வில் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன வனஜீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமல வீரதிசாநாயக்கா பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யு டி வீரசிஙங்க திலக ராஜபக்ஷ மற்றும் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் பிரதேச செயலாளர்கள் உதவி பிரதேச செயலாளர் உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# ஜனாதிபதியின் திட்டத்தில் கோழிக் குஞ்சுகள் கையளிப்பு

ஜனாதிபதியின் சுபீட்சமான எதிர்காலம் திட்டத்தின் மூலம் சமுர்த்தி திணைக்களத்தினால் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றும் நோக்கில் கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்வும் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராசாஇ செயலக கணக்காளர் எம்.சஜ்ஜாத்இ சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எம்.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு கிராம சேகவர் பிரிவில் இருந்து மூன்று பேர் தெரிவு செய்யப்பட்ட எட்டு கிராம சேவகர் பிரிவில் இருந்து இருபத்தி நான்கு பேருக்கு ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான பதினான்கு கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கி வைக்கப்பட்டதாக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எமம்.ஐ.ஏ.அஸீஸ் தெரிவித்தார்.

(ந.குகதர்சன்)

# சனசமூக நிலையங்களுக்கு பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் செயற்பட்டு வரும் சனசமூக நிலையங்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவற்றிற்கு மாநகரசபை நிதியின் மூலம் பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்றைய தினம் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர் தி.சரவணபவன், மாநகரசபை உறுப்பினர்கள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரசபையின் 2020ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பாதீட்டில் மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டது.

அந்நிதியின் மூலம் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு, முதற் கட்டமாக சிறப்பாக இயங்கி வரும் பத்து சனசமூக நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டு பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.








# பல்லினங்களை உடைய நாட்டில் ஒரே சட்டம் ஏற்புடையதல்ல முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ்

(வாஸ் கூஞ்ஞ)



இன நல்லிணக்கமும் நிலையான அமைதியும் இந் நாட்டில் நிலைகொள்ள வேண்டுமானால் ஜனாதிபதி கோட்டாபய ஞானசார தேரர் தலைமையில் அமைத்துள்ள ஒரே நாடு ஒரே சட்டம் என்ற விடையத்தை முன்னெடுக்கும் செயலணி பல்லினங்கள் வாழும் இந்த இலங்கைத் தீவில் ஏற்புடையதல்ல. இதனை நிறுத்திக் கொள்வதே நலம் என முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் செய்தியில்

பல இனங்கள் வாழும் ஒரே நாட்டில் பல் வகைமை கொண்ட கலாசார மத பண்பாட்டு விழுமியங்கள் காணப்படுவதால் பெரும்பாண்மை இனத்தை மையமாக கொண்ட ஒரே சட்டம் என்ற கோசம் ஏனைய இனங்களின் அடிப்படை உரிமைகளை புறம் தள்ளுவதுடன் அவர்களது அரசியல் அபிலாசைகளை குழி தோண்டிப் புதைப்பதாக அமையும்

இதனால் ஒரே நாட்டிற்குள் தொடர்ந்தும் அமைதியற்ற சூழல் உருவாகும். அத்துடன் சர்வதேச நாடுகளின் மேலாதிக்க அழுத்தங்கள் சர்வதேச நியமங்களை அடிப்படையாக கொண்டு வலுப்பெறும் இதனை சிங்கள தேசம் இனியும் எதிர் கொள்ளத் தயாரா? என்ற கேள்விக்கான விடையை நிதானமாக சிந்திக்க வேண்டும்.

உலக நாடுகளின் ஒழுங்கு முறைகளை ஆராய்ந்தால் பல் வகை இனங்கள் வாழும் நாடுகளில் எல்லாம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் ஒவ்வொரு இனங்களின் தனித்துவங்களையும் பாதுகாக்கும் வகையிலான அரசியமைப்புக்களை உருவாக்கி இனங்களின் சுயமரியாதையை பேணும் வகையில் முன்னோக்கி நகர்கின்றன. இந்த நவீன உலகில் மிகவும் பிற்போக்குத்தனமாக ஒரே நாடு ஒரே சட்டம் என்ற மனோநிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் இருப்பது மிக வேதனையாக உள்ளது.

இந்த செயலணியை நிறுத்தி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை ஒவ்வொரு இனங்களுக்கும் வழங்குவதே ஒரே நாட்டிற்குள் சகல இனங்களும் நல்லிணக்கத்துடன் நிரந்தர சமாதானத்துடன் வாழ முடியும் இதுவே இலங்கைத் தீவின் நிலையான அபிவிருத்திக்கும் நிரந்தரத் தீர்வாகும் என இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்





(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வாழும் வருமானம் குறைந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் இஸ்லாமிக் ரீலிப் அமைப்பினர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இதன்போது மாணவர்களுக்கு தேவையான புத்தகப்பை அடங்கலாக கொப்பிகள் பாடசாலை சப்பாத்து என்பன வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவைச் சேர்ந்த மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.முஸ்பிறா சிறுவர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எல்.இஸ்பானா மகளிர் அபிவிருத்திகள உதவியாளர் எஸ்.எ.எம்.எஸ்.பர்ஹானா உளவளத்துணை உத்தியோகத்தர் எ.எம்.சப்ரினா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அரண் சஞ்சிகை வெளியீட்டு வைக்கப்பட்டது

ஏ. எல்.எம்.ஷினாஸ்







கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினரால் 'அரண்' சஞ்சிகை வெளியீட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வு நேற்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். குணசிங்கம் சுகுணன் தலைமையில் காலை, மாலை என இரு கட்டங்களாக இடம்பெற்றன.

இந்த வெளியீட்டு விழாவில் முன்னாள் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிசாம், பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான உமா வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சஞ்சிகை பற்றி கருத்துரைத்தனர்.

சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம். பி. அப்துல் வாஜித் சஞ்சிகை வெளியீட்டு உரையை நிகழ்த்தினார். பொதுமக்களை பாதுகாக்கும் காவலரணாக சுகாதார தரப்பு காணப்படுகின்றது. எதிர்காலத்தில் பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும் தடையின்றி தமது சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். என்ற உன்னத நோக்கத்தில் இந்த 'அரண்' சஞ்சிகை காலாண்டுக்கு ஒருமுறை வெளிவரும் என வைத்திய பணிப்பாளர் இங்கு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள். சட்டத்தரணிகள், கல்விமான்கள், அரச நிர்வாக அதிகாரிகள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், புத்திஜீவிகள் சுகாதாரப் பிரிவினர் என பலரும் கலந்து கொண்டனர்.

20 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சஞ்சிகை ஒன்று வெளியீட்டு வைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையான், அமல் அரசைவிட்டு வெளியேறுவார்களா?

(காரைதீவு நிருபர் சகா)



தமிழ் மக்களுக்கான நிரந்தர அபிவிருத்தியோ அல்லது நிரந்தர தீர்வோ பெற்றுக் கொடுக்க பிள்ளையான், அமல் போன்றோரால் முடியுமா? அவ்வாறு முடியாவிட்டால் அரசை விட்டு வெளியேறும்படி சவால் விடுகின்றோம்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணி உபசெயலாளர் அருள். நிதான்சன் விடுத்த ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கிழக்கில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்துக்கு அரசின் கைப்பொம்மைகளான பிள்ளையான் மற்றும் அமல் ஆதரவு வழங்கின்றனரா? இதற்குத்தானா தமிழ் மக்கள் உங்களுக்கு வாக்களித்தது என்பதை சிந்தித்துப்பாருங்கள். துரோகம் செய்யாதீர்கள்.

கிழக்கில் தொடர்ச்சியான முறையில் ''தொல்லியல்''எனும் போர்வையிலும் யுத்தத்தால் மட்டக்களப்பில் இருந்து இடம் பெயர்ந்த சிங்களவர்கள் எனும் அடிப்படையிலும் தமிழர்களின் பூர்வீக மண் சூறையாடப்பட்டுவருகின்றது.

குறிப்பாக அம்பாறை மட்டக்களப்பு பிரதேசத்தில் திட்டமிட்டு மிகத் தீவிரமாக தமிழர்களின் இன விகிதாசாரம் மாற்றியமைக்கப்படுகின்றது.

இதுவரையில் அம்பாறையில் கனகர் கிராம மக்களுக்கு காணி கொடுக்கப்படவில்லை. மேலும் திருக்கோவில் பிரதேச எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அரசாங்கத்தின் துணையோடு மண் கொள்ளை நடக்கின்றது.

மட்டகளப்பில் கோரகல்லிமடுவில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அனுசரணையோடு திட்டமிட்ட குடியேற்றத்துக்கு காணி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன.

இந்த அரசிற்கு முட்டுக் கொடுப்பதற்காக முஸ்லிம்களை நசுக்க வேண்டும் எனக் கூறி ஆட்சி பீடத்துக்கு வரத்துடித்து இனவாத அரசியல் செய்த தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியும்,வியாழேந்திரன் ஆகியோரும் அரசின் கைப்பாவையாகி உள்ளனர்.

கிழக்கில் முஸ்லிம் ஆக்கிரமிப்பு என்று குரல் கூச்சலிட்டவர்கள் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்துக்கு சாமரம் வீசி வரவேற்கின்றனர்.

இன்று நாடு பாதுகாப்பற்றதாக உள்ளது எனக் கூறி ஆட்சியை பிடித்தவர்கள் இன்று தமிழர்களை முற்றாக புறக்கணித்து ''ஒரு நாடு ஒரு சட்டம் '' செயலணி முஸ்லிம்,சிங்களர்களை மாத்திரம் சேர்த்து அமைத்துள்ளனர்.

இதனை பேச முடியாதவர்களாக இன்று பிள்ளையான் அவர்களும் அவர்களது சகாக்களும் உள்ளனர். ஏனெனில் இவர்கள் கடந்த காலத்தில் செய்த ஊழல் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆராயப்பட்டு விடுமோ என்ற அச்சமோ தெரியவில்லை .மேலும் இராஜாங்க அமைச்சு இழக்கபட்டு விடும் எனும் பயத்தில் இந்த அரசுக்கும் இன்னமும் அமல் அவர்கள் அர்ச்சனை செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்களால் முடிந்தால் ஒரு தமிழ் மக்களுக்கான நிரந்தர அபிவிருத்தியோ அல்லது நிரந்தர தீர்வோ பெற்றுக் கொடுக்க முடியுமா? அவ்வாறு முடியாவிட்டால் அரசை விட்டு வெளியேறும்படி சவால் விடுகின்றோம் .

# பின்தங்கிய எட்டு பாடசாலைகளுக்கு றோட்டரிக் கழகத்தின் கற்றல் உபகரணங்கள்!

(வி.ரி.சகாதேவராஜா)





சர்வதேச றோட்டரிக்கழகத்தின் கல்முனைக்கிளை, அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு 10 லட்ச ருபா பெறுமதியான கற்றலுபகரணங்களை வழங்கி வருகிறது. அதன் அங்குரார்ப்பண விழா , நேற்று சம்மாந்துறை வலயத்திலுள்ள நாவிதன்வெளிக்கோட்டத்தின் அன்னமலை சிறிசக்தி வித்தியாலயத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

வித்தியாலயஅதிபர் பொன்.பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், றோட்டரிக்கழகத்தின் கல்முனைக்கிளைத் தலைவர் றோட்டரியன் த.புஸ்பராசா, செயலாளர் றோட்டரியன் எம்.சிவபாதசுந்தரம் ,சம்மாந்துறை வலயம் சார்பில் உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ,பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எஸ்.அற்புதராஜா உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

நீண்டகாலத்திற்குப்பிறகு பாடசாலையில் அதிதிகள் பூமாலைகள் சூட்டப்பட்டு முறையான விழாவொன்று பெற்றோர், ஆசிரியர்,மாணவர்சகிதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அங்கு கல்முனை றோட்டரிக்கழக செயலாளர் றோட்டரியன் எம்.சிவபாதசுந்தரம் உரையாற்றுகையில்:

அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு 1.1மில்லியன் ருபா பெறுமதியான கற்றலுபகரணங்களை வழங்கிவருகிறது.

அவுஸ்திரேலியா நாட்டு கன்பரா றோட்டரிக்கழகம் இவ்வுதவிக்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தது.

முதற்கட்டமாக, இன்று நாவிதன்வெளிக்கோட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய அன்னமலை சிறிசக்தி வித்தியாலயம், குடியிருப்புமுனை சண்முகா வித்தியாலயம் ,வீரச்சோலை மகாவித்தியாலயம் ஆகிய 3 பாடசாலைகளின் 18% மாணவர்களுக்கான கற்றலுபகரணங்கள் வழங்கிவைக்கப்படுகின்றன.

பாடசாலை பைகள் ,அப்பியாசக்கொப்பிகள் ,சப்பாத்துகள், மழைக்கோர்ட், வெப்பமானி உள்ளிட்ட உபகரணங்கள் இதில் அடங்குகின்றன.இதற்கென 3லட்சத்து 30ஆயிரத்து 400ருபா செலவு செய்யப்பட்டுள்ளது.கொரோனா காரணமாக இழந்தகல்வியை மாணவர்கள் தங்குதடையின்றி மீளப்பெற்று நற்பிரஜைகளாக வரவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். என்றார்.

சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா பேசுகையில்:

உலகில் போலியோ நோயை முற்றாக விரட்ட அனுசரணைபுரிந்த சர்வதேச றோட்டரிக்கழகம் இப்பிராந்தியத்தில் கடந்தகாலங்களில் பல்வேறு வகையான மனிதாபிமான சேவைகளை செய்துவருவதை நானறிவேன்.

அதிபர் பாரதிதாசனின் அயராத முயற்சியால் இப்பாடசாலை புதுப்பொலிவுபெற்றுவருவது கண்டு அகமகிழ்வடைகிறேன். மிகவும் பின்தங்கிய இப்பாடசாலை மாணவர்க்கு இவ்வுதவிகள் மிகவும் பிரயோசனமாகவிருக்கும் என்பதில் ஐயமில்லை. றோட்டரிக்கழகத்தினருக்கு எமது வலயம்சார்பில் நன்றிகள் என்றார். இறுதியில் மாணவருக்கு கற்றலுபகரணங்கள் அதிதிகளால் வழங்கிவைக்கப்பட்டதோடு தலைவர் த.புஸ்பராசா நன்றியுரையாற்றினார்.

# நினைவாற்றல் போட்டியில் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த ஆறு வயதுடைய சிறுமி ஆசிய நாடுகளுக்கிடையே சாதனை

(ஏறாவூர் நிருபர்)

இந்தியாவிலுள்ள புக் ஒப் றெக்கோட்ஸ் (Indian Book of Records) பப்லிகேஷன் நிறுவனத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட நினைவாற்றல் போட்டியில் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த ஆறு வயதுடைய சிறுமி ஆசிய நாடுகளுக்கிடையே சாதனை நிலைநாட்டியுள்ளார்.

ஜெஸா ஜெய்னப் என்ற இச்சிறுமி நாற்பது நாடுகளின் பெயர்கள் மற்றும் ஆங்கில மொழியில் நூறு சொற்களையும் ஒரு நிமிடம் பதினொரு வினாடிகளில் பிழையின்றி மிக வேகமாக எழுத்துக்கூட்டல் செய்கிறார்.

கடந்த சில சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் ஆகியோர் இச்சிறுமிக்கு நினைவுச்சின்னம் மற்றும் தங்க மோதிரம் என்பவற்றை வழங்கி கௌரவித்து பாராட்டுத்தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஏறாவூர் மிச்நகர் பகுதியில் வசிக்கும் முகமட் பஸால் பாத்திமா சனுசா தம்பதிகளின் முதலாம் பிள்ளையான இவர் ஏறாவூர் அல்-அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் தரம்-1 வகுப்பு மாணவியாவார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதான அரிசியல் வாதிகள் தனது வீட்டிற்கு வருகைதந்து தன்னைப்பாராட்டி ஆசீர்வதிக்கவேண்டுமென்பது தனது ஆசையென இவர் கூறுகிறார்.

மேலும் திறமையுடன் கல்வி கற்று எதிர்காலத்தில் விமான ஓட்டி (Pilot) ஆக வருவதே தனது இலட்சியமென்றும் அவர் குறிப்பிட்டார்.